சைவத்தமிழ் கலாச்சார ஆய்வுமையம்

CVR Nr: 34661421

பொதுக்கூட்ட அறிக்கை 08-12-2024

கூட்டம் ஆரம்பம் 17.30

இடம்: ஆலய திருமணமண்டபம்

25-08-24 அன்று நடைபெற்ற பொதுகூட்டத்தின் தொடர்ச்சி

தற்காலிக தலைவர் விளக்கவுரை:-

சுதன் அவர்கள் தன்னை நிர்வாகத்தில் உள்ள நான்கு பேர் தலைவர் பதவியில் இருந்து நீக்கியது தொடர்பாக விளகக்கமளித்தார்.

தன்னோடு கலந்தலோசிக்காமலும் தனக்கே தெரியாமலும் அன்றைய நிர்வாக்கூட்டம் தன்னால் நிறைவு செய்யப்பட்டபின் தன்னை நீக்கியதாகவும் தானே வேல்முருகன் ஆலய viber தளத்தில் பார்த்துதான் தெரிந்து கொண்டதாவும் கூறினார். நிரவாகம் கலைக்கபட்டதை பற்றியும் விளக்கமாக கூறினார். தொடர்ந்து திரு சிவகுருநாதனும் திருமதி ரஞ்சி அவர்களும் தங்களது கருத்துக்களையும் கூறினார்கள்

சுதன் அவர்கள் தனது தலைவர் பதவியை விட்டு விலக அவைத்தலைவர் மோகன் செல்வரத்தினம் அவர்களால் தொடர்ந்து கூட்டம் நடாத்தப்பட்டது.

திரு சுதன் அவர்களை பதவியில் இருந்து நீக்கியதற்கான காரணங்கள் என்ன என்பதை பொதுச்சபையில் இருந்தோரால் கேள்விகளாக கேட்கபட்டது அதற்கு அவர் சில காரணங்களை முன்வைத்தார்.

Fagdrag கொடுத்தவர்களின் பெயர் விபரங்கள் கேட்டபொது கொடுக்க மறுத்த்து

ஆலயத்தில் நடந்த சில பிரச்சனைகளை தட்டி கேட்டபோது நிர்வாகத்தில் சிலருக்கு அதில் உடன்பாடில்லை.

Kirkeministeriet இல் பதிவதற்காக Nem id கேட்ட போது கொடுக்க மறுத்தது

வங்கி சம்மந்தமான அனைத்து விடயங்களும் ஒருவரின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது

நிர்வாகத்துக்கு தெரியாமல் தம்பிரான் பூசாரி எப்படி ஆலயத்துக்கு வந்தார் என்பது பற்றி கேட்டபோது அதைப்பற்றி ஒருவரும் தன்னிடம் கேட்க்ககூடாது என்று சொன்னது

சமஷ்கிருத ஐயரை கூப்பிட நிர்வாகம் தயார் படுத்திய நிலையில் நிர்வாகத்திற்க்கு தெரியாமல் தம்பிரானை கூப்பிட்டது.

பொதுச்சபையில் இருந்த ஒருவர் நீங்கள் இப்படி கூறுவதை பார்க்கும் பொழுது உங்களை நீக்கியது எங்களுக்கு அவர்கள் மேல் இன்னும் சந்தேகத்தை கூட்டுகின்றது என்று சொன்னார்.

அதற்கான பல்வேறு காரணங்களையும் முரண்பாடுகளையும் நிர்வாகத்தில் உள்ளவர்கள் சிலரின் தன்னிச்சையான பல முடிவுகளையும் பொதுச்சபைக்கு விளக்கமாக கூறினார்.

## ஒருங்கினைப்பு குழு தெரிவும்/ தீர்மாணங்களும்

பொதுச்சபையால் புதிய நிர்வாகத்திற்கான தெரிவுகளை நியமனம் செய்தால் அதனால் வரும் சிக்கல்களை கதைத்து முடிவெடுப்பதற்காக ஒரு ஒருங்கினைப்பு குழு அமைக்கபட்டது.

பழைய நிர்வாகம் சார்பாக திரு ரவீந்திரன் அவர்களும் பொதுச்சபை சார்பாக திருமதி காந்திமதி லக்ஷ்மிகாந்தன், திரு சிறிரங்கன், திரு சுதன் சற்குருநாதன், திரு சரன் அகியோர் நியமிக்கபட்டனர்.

அவர்கள் பழைய நிர்வாகத்துடன் பல தடவைகள் சென்று கதைத்து சில முடிவுகள் எடுக்கபட்டது.

1. பழைய நிர்வாகத்தில் உள்ள நான்கு பேர் மறுபடியும் ஆலய நிர்வாகத்திற்குள் வரமாட்டார்கள்.

2. அவர்களின் தூண்டுதலினாலோ,வற்புறுத்தலினாலோ வேறுயாரையும் சேர்க்க மாட்டார்கள் என்றும் உறுதியளிக்கபட்டது.

3. அவைத்தலைவராக மோகன் செல்வரத்தினம் அவர்கள் செயற்பட ஆமோதிக்கபட்டது

4. அடுத்தகூட்டம் 15-12-24 ல் நடக்க திகதி அறிவக்கபட்டது.

5. இப்போழுது இருக்கும் ஆலய பூசகரின் விசா 16 Feb முடியும் வரை அவரின் முழுப்பொறுப்பும் பழைய நிர்வாகம் தங்களிடமெ இருக்கவேண்டும் எனக் கோரிக்கை வைத்தது அதனை பொதச்சபை ஏற்றுக்கொண்டது.

6. 15-12-24 ல் நடைபெறும் பொதுச்சபை கூட்டத்தில் பழைய நிர்வாகம் கோவில் சம்பந்தபட்ட அனைத்து அசையும் அசையா சோத்துக்களினின் ஆவணங்களை பொதுச்சபையில் கையளிக்கபடவேண்டும்.

7. 2024 ம் ஆண்டுக்கான வரவு செலவுக்கான கணக்கு பத்திரங்கள் அனைத்தும் 15-01-25ல் ஒருங்கனைப்பு குழுவின் முன்னிலையில் புதிய நிர்வாத்திடம் ஒப்படைக்கவேண்டும்.

8. 08-12-24ல் இருந்து 15-12-24 வரையிலான அனைத்து வங்கி நடவடிக்கைகளும் ஒருங்கினைப்பு குழுவின் ஒத்துழைப்புடனும் மேற்பார்வையுடனுமே செயற்படவேண்டும்.

9. 15-12-24 இற்கு முன் அனைத்து அங்கத்தவர்களின் விபரங்களும் பணம் கட்டிய விபரமும் கையளிக்கபடவேண்டும்.

10. 08-12-24 ல் பழைய நிர்வாகத்தின் நான்கு பேர் கொண்ட குழு சமூகமிளிக்கவுமில்லை ஏற்றுக்கொள்ளவுமில்லை.

11. 15-12-24 அன்று நடைபெறும் கூட்டமானது 50 வீதத்துக்கும் குறைவான அங்கத்தவர் சமூகமளித்தாலும் கூட்டம் நடைபெறும்.

ஆகிய தீர்மாணங்கள் எடுக்கபட்டு பழைய நிர்வாகத்திற்கும் பொதுச்சபைக்கும் தீர்மாணங்கள் வாசிக்கபட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளபட்டது.

## இடைக்கால நிர்வாகத்தெரிவு

அடுத்த ஒரு கிழமைக்கு( 08-12-24 -15-12-24)இடைக்கால நிர்வாக உறுப்பினர்களாக 7 பேர் தெரிவு செய்யபட்டார்கள் அவர்களின் பெயர் விபரம்.

1. லக்ஷ்மிகாந்தன்
2. சிவகுருநாதன்

3. ராகினி அன்னலிங்கம்
4. கிருபாகரன்
5. சுதன் செல்வநாயகம்
6. ரஞ்சி மகேசன்
7. லசிகரன்

15-12-24 பொதுகூட்டம் நடத்தபட்டால் இந்த இடைக்கல நிர்வாகம் கலைக்கபட்டு புது நிர்வாகம் தெரிவு செய்யப்படும். கூட்டம் நடத்த இடையூறு செய்யப்பட்டால் இந்த நிர்வாகமே தொடர்ந்து இயங்கும் எனத் தீர்மாணிக்கபட்டது.

வங்கிகணக்கு விபரம்:-

08-12-24 இரவு 8 மணிக்கு

வங்கிகணக்கு ஒன்றில் 1 குரோண்களும்

வங்கிகணக்கு இரண்டில் 7.86.324,94 குரோண்களும்

கையிருப்பாக 3000 குரோண்களும் உள்ளன

இரவு 10.30 மணிக்கு கூட்டம் நிறைவு பெற்றது.

அவைத்தலைவர். எழுதுனர்

மோகன் செல்வரத்தினம் வசந்தினி கருனானந்தன்